بسم الله الرحمن الرحيم    نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم    وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 5

இதழ் 35

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

07 முஹர்ரம் 1442 ஹிஜ்ரி கமரி 27 ஸுஹுர் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
27 ஆகஸ்ட் 2020

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰلِكَ لِمَنْ يَّشَآءُ ۚ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدِ افْتَرٰٓى اِثْمًا عَظِيْمًا

தனக்கு இணை வைப்பதை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்க மாட்டான். இ(ந்தப் பாவத்)தை விடக் குறைந்ததை தான் நாடியவருக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கு (எதையாவது) இணை வைப்பவன், மாபெரும் பாவத்தை உருவாக்கிக் கொண்டான். (5:49)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நாகரீகத்தின் அடிப்படையில் ஹிந்துக்களின் உணவையும் நாம் உண்ணுகின்றோம். அதேபோன்று கிறித்தவர்களின் உணவை உண்ணுவதும் சரியானதாகும. ஆனால் உணவு உண்ணப்படுகின்ற அந்த பாத்திரமானது தூய்மையாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருப்பது அவசியமாகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### உண்மையாளர் மற்றும் பொய்யர் ஆகிய இருவருக்கும் உள்ள வேறுபாடு

சில எதிரிகள் தங்களுக்கும் இல்ஹாம் (இறை அறிவிப்பு) வருகிறது என்று வாதம் செய்கின்றார்கள். உண்மையாளர்கள் மற்றும் பொய்யர்கள் ஆகிய இருவருக்குமிடையில் எவ்வாறு அடையாளம் காண்பது? என்பது தொடர்பாக கேள்வி கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இது மிகவும் எளிதான விஷயமாகும். எவர் அவ்வாறு வாதம் செய்கின்றாரோ அவர் நமக்கு முன்னால் வந்து நாங்கள் உண்மையாளர் என்றால் நம்முடைய எதிரி நமக்கு முன்பே மரணமடைந்து விடுவார் என அவர் வாதம் செய்து அதை அச்சிட்டு வெளியிட வேண்டும்.

இறைவன் புறமிருந்து நமக்கு மிகவும் எப்படிப்பட்ட உறுதியான நம்பிக்கை அளிக்கப்பட்டுள்ளது என்றால் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து வாழ்வாதாரங்களும் இருக்கின்ற மற்றும் தன்னுடைய வயதில் மிகப்பெரிய பகுதி எஞ்சியிருக்கக்கூடிய ஒரு பத்து வயது சிறுவன் இந்த வாதத்தை செய்து நமக்கு எதிராக நின்றால் எல்லாம் வல்ல அல்லாஹ் அவனை நமக்கு முன்பே மரணிக்கச் செய்வான்.

### 15 ஜனவரி 1898 – ஷியா மார்க்கத்தின் கொள்கை

அன்னார் கூறினார்கள்: ஷியா மார்க்கம் இஸ்லாத்திற்கு முற்றிலும் எதிரானதாகும்.

முதலாவது – ஷியாவின் கொள்கை என்னவென்றால், ஜிப்ரீல் (வானவர்) வஹீ இறக்கியதில் தவறிழைத்து விட்டார்கள்.

இரண்டாவது – ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆக்களின் மூலமாக இஸ்லாத்தில் இணைந்த சஹாபாக்கள் இவர்களது பார்வையில் மஆஸல்லாஹ் (அல்லாஹ் பாதுகாப்பானாக) முஸ்லிம்கள் அல்ல.

மூன்றாவது – அல்லாஹ்வின் தூய வேதமாகிய திருக்குர்ஆன் எதை பாதுகாப்பதற்கான வாக்குறுதியை அல்லாஹ் சுயமே வழங்கியுள்ளானோ ஷியாக்களின் கொள்கையின்படி அந்த திருக்குர்ஆன் அசல் வடிவில் அல்ல. இமாம் மஹ்தி அவர்கள் அசல் வடிவிலான திருக்குர்ஆனை குகையில் எடுத்துச் சென்று பதுங்கி விட்டார்கள்.

நான்காவது – 12 இமாம்களோடு ஆட்சி முற்றுப் பெற்று விட்டது. எஞ்சியிருக்கின்ற மனிதர்கள் மிருகங்கள் போன்று கியாமத் வரை இருப்பார்கள். மேலும் இறைவனுக்கு அவர்கள் மீது எந்த ஒரு அன்பும் நேசமும் இல்லை.

ஐந்தாவது – இறைவனின் நேசரான எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களை (ரலி) தீய வார்த்தைகளில் ஏசுவதை, ஸலவாத் ஓதுவதை விட அதிக பலன் தரகூடியதாக கருதுகிறார்கள்.

ஆறாவது – எந்த ஒரு சான்றோர் மற்றும் இறைநேசரைம் நன்நெறியாளர் என கருத மாட்டார்கள்.

நான் என்னுடைய ஆசிரியரிடம் ஹஸ்ரத் செய்யது அப்துல் காதர் ஜெய்லானி (ரஹ்) அவர்களை ஷியாக்கள் தீய வார்த்தைகளினால் ஏசியதாக கேள்விப்பட்டுள்ளேன். அசல் விஷயம் என்னவென்றால், மிக அதிகமாக அவப்பெயரை பெற்றவன் யஸீத் ஆவான். அவனுடைய தலையீட்டால் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். அவன் தவறு செய்து விட்டான். ஆனால் இன்றைய நாட்களில் ஷியாக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மார்க்கப் பணியை செய்தாலும் அவரைப் போன்று செய்ய முடியாது.

### வேதம் வழங்கப்பட்டவர்களின் உணவு

வேதம் வழங்கப்பட்டவர்களின் உணவை உண்ணுவது தொடர்பாக பாபு முஹம்மது அஃப்ஜல் சாஹிப் கேட்டதற்கு ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: நாகரீகத்தின் அடிப்படையில் ஹிந்துக்களின் உணவையும் நாம் உண்ணுகின்றோம். அதேபோன்று கிறித்தவர்களின் உணவை உண்ணுவதும் சரியானதாகும. ஆனால் உணவு உண்ணப்படுகின்ற அந்த பாத்திரமானது தூய்மையாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருப்பது அவசியமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 133,134 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எழுபது ஆயிரம் வானவர்கள் ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் ஜனாஸாவில் கலந்து கொண்டுள்ளனர். இதற்கு முன்பு இவ்வாறு ஒருபோதும் இவர்கள் பூமியில் இறங்கியதில்லை**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியும், இஸ்லாத்தின் தோற்றுனர் (ஸல்) அவர்களின் மிகவும் நேசத்திற்குரியவரும், மிகவும் கலப்பற்ற, பற்றுணர்வுமிக்க மற்றும் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅத் பின் முஅஸ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவரும், மக்காவின் காலகட்டத்தில் துன்பங்களை சகித்துக் கொண்டவரும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதிற்குரிய பாக்கியத்தைப் பெற்றவரும், இஸ்லாம் மற்றும் கிலாஃபத்திற்காக தன்மான உணர்வை கொண்டிருந்தவரும், வீரமிக்க போர் வீரரும், பத்ர் போரில் கலந்து கொண்டவருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபி ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 ஜுலை 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **17 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாக்களில் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களைப் பற்றி கூறப்பட்டு வந்தது. அகழ்ப் போரில் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் உடைய சம்பவங்களை சீரத்துல் காத்தமுன் நபிய்யீனில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்: இந்தச் சண்டையில் முஸ்லிம்களுக்கு அதிகமான உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. 5–6 பேர்தான் ஷஹீதானார்கள். ஆனால், அவ்ஸ் கோத்திரத்தின் பெரும் தலைவராக இருந்த சஅத் பின் மஆஸ் அவர்களுக்கு கடும் காயம் ஏற்பட்டது. அதனால் அவர்கள் அதிலிருந்து உயிர் தப்பிக்க இயலவில்லை.

முஸ்லிம்களுக்கு கணிசமான தாக்குவதற்கு இயலாத பெரும் நஷ்டமாக இருந்தது. நிராகரிப்பாளர்களின் படையில் வெறும் மூவர் மட்டுமே கொல்லப்பட்டனர். ஆனால் இந்தச் சண்டையில் குறைஷிகளுக்கு பெரும் சோர்வு ஏற்பட்டது. இதனால் அவர்கள், இதற்குப் பிறகு முஸ்லிம்களுக்கு எதிராக ஒன்று கூடி தாக்குவதற்கும், வெளிவருவதற்கும், மதீனா மீது தாக்குதல் தொடுக்கவும் தைரியம் இல்லாமல் போனது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பு வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 595)

இது பற்றி நான் கடந்த குத்பாவில் கூறி விட்டேன். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வருங்காலத்தில் நம் மீது தாக்குதல் தொடுக்க தைரியம் ஏற்படாது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அது வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியது. ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் அவர்களுக்கு அகழ்ப் போரின்போது கழுத்தில் காயம் ஏற்பட்டது. அதனால் அவர்களுக்கு ஷஹாதத் ஏற்பட்டது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் அகழ்ப் போரில் வெளியில் வந்தேன். மக்களின் பாதம் பட்ட அடையாளங்களைப் பார்த்துச் சென்று கொண்டிருந்தேன். பின்னாலிருந்து ஒரு சப்தம் வந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் தமது சகோதரர் மகன் ஹாரிஸ் பின் அவ்ராவை துணைக்கு வைத்தவாறு வந்து கொண்டிருந்தார்கள். நான் நிலத்தில் அமர்ந்து விட்டேன். ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் ஒரு கவிதையைப் பாடியவாறு என்னைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

لَبِّثْ قَلِيْلًا يُدْرِكُ الْهَيْجَا حَمَلْ مَا أَحْسَنَ الْمَوْتَ إِذَا حَانَ الْأَجَلْ!

அதாவது சிறிது நேரம் பொறுத்திரு. போருக்காக ஒட்டகங்கள் கடந்து செல்லட்டும். குறிப்பிட்ட நேரம் வந்து விட்டால் மரணம் எவ்வளவு சிறந்தது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் உடம்பில் ஒரு கவசம் இருந்தது. அதனை மீறி இரு பக்கமும் வெளியில் தெரிந்தது. அதாவது உடல் கனத்து இருந்ததால் அது வெளியில் தெரிந்தது. அதன் மூலம் ஹஸ்ரத் சஅத் உடைய இரு புறமும் காயம் இருப்பதைக் கவசத்தில் இருந்து வெளியில் தெரிந்த பகுதியிலிருந்து யூகிக்க முடிந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 322 சஅத் பின் முஆஸ் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஅத் பின் மஆஸ் அவர்களை இப்னு அரிகா காயமுறச் செய்தான். இப்னு அரிகாவின் பெயர் அஃப்பான் பின் இப்னு முனாஃப் ஆகும். பனூ ஆமில் பின் லூயி கோத்திரத்தைச் சார்ந்தவர். ஆரிகா என்பது அவரது தந்தையின் பெயராகும்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 3 பக்கம் 71 சஅத் பின் முஆஸ்– 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் உடைய விலாப்புறத்தின் நரம்பில் அம்பின் காயம் இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கைகளால் அம்பு முனையை வெளியில் எடுத்து அம்முனையால் காயத்தை வெட்டி எடுத்தார்கள். பிறகு திரும்பவும் அவ்வாறு செய்தார்கள். காயம் ஏற்படுத்திய முனையைக் கொண்டே அதனை வெட்டி சரிசெய்தார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் ஸலாம்.... ஹதீஸ் எண் 2208)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இப்னு அரிகா, அம்பால் காயம் ஏற்படுத்திய நேரத்தில் ஓர் அம்பை எய்தபோது நான் இப்னு அரிகா ஆவேன் என்றான். அந்த அம்பு சஅத் உடைய விலாவில் பட்டது. காயம் ஏற்பட்டதும் சஅத் அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள். ''அல்லாஹ்வே! நீ பனூ குரைலா குறித்து ஆறுதல் படுத்தாமல் எனக்கு மரணத்தைத் தந்து விடாதே!''

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 322 சஅத் பின் முஆஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: அகழ்ப் போரின்போது ஹஸ்ரத் சஅதுக்குக் காயம் ஏற்பட்டது. குறைஷிகளின் ஒரு மனிதர், அஃப்பான் பின் அரிகா என்று அழைக்கப்பட்ட மனிதர் அம்பை எய்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஅதுக்காக பள்ளிவாயிலில் ஒரு கூடாரமிட்டார்கள். அன்னாரை அதில் வைத்து கவனிப்பதற்காக அவ்வாறு செய்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 325 சஅத் பின் முஆஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் சஅத் உடைய காயம் நன்றாக குணமடையத் தொடங்கியது. அந்நிலையில் அன்னார் துஆ செய்தார்கள். ''அல்லாஹ்வே! நீ அறிவாய். இந்தச் சமுதாயத்துக்கு எதிராக ஜிஹாது செய்வதை விட எனக்குப் பிரியமான செயல் எதுவும் இல்லை. அவர்கள் உனது தூதரைப் பொய்ப்படுத்தினார்கள். ஊரிலிருந்து வெளியேற்றினார்கள்.

மேலும் அல்லாஹ்வே! நான் எண்ணுகிறேன். நீ எமக்கும் அவர்களுக்கும் இடையில் சண்டையை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டாய். குரைஷிகளின் சண்டை இன்னும் எஞ்சியிருக்கும் எனில் அவர்களை எதிர்த்து நிற்க என்னை உயிருடன் வைப்பாயாக. யுத்தம் மேலும் தொடரும் எனில் அதுவரை என்னை உயிருடன் வைப்பாயாக. நான் உன் வழியில் ஜிஹாது செய்ய வேண்டும். நீ எமக்கும் அவர்களுக்கும் இடையில் சண்டையை முடித்து விட்டாய் எனில் எனது வழியைத் திறந்து விட வேண்டும். இந்தக் காயத்தை எனது ஷஹாதத்திற்குக் காரணமாக ஆக்க வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.''

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த இரவில் அந்த காயம் உடைந்தது. அதிலிருந்து இரத்தம் வெளியேறியது. பனூ கஃப்பார் மக்களின் கூடாரங்களும் மஸ்ஜிது நபவியில் இருந்தன. இவரது இரத்தம் வழிந்தோடி அவர்களின் கூடாரம் வரை சென்றது. அவர்கள் பயந்து போய் விட்டனர். அவர்கள் இது என்ன இரத்தம்? உங்கள் கூடாரத்திலிருந்து இங்கு வருகிறது என்றனர். பிறகு சஅதுடைய உடலிலிருந்து இரத்தம் வருவதைப் பார்க்கிறேன். அதன் மூலமே அன்னாரது மரணம் நிகழ்ந்தது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் உடைய இரத்தம் பெருக்கெடுத்தபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எழுந்து அவரிடம் சென்றார்கள். அவரை தன்னுடன் அணைத்துக் கொண்டார்கள். இரத்தம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முகம் மற்றும் தாடியிலும் பட்டது. முயற்சி செய்தும் அந்த இரத்தப்பெருக்கு நிற்காதபோது அன்னார் இன்னும் அருகில் சென்றார்கள். அந்நிலையில் ஹஸ்ரத் சஅத் மரணமடைந்தார்கள்.

இன்னோர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் அவர்களுடைய காயம் வெடித்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அது தெரிய வந்ததும் அன்னார் அவரிடம் சென்றார்கள். அவரது தலையை தமது மடியில் வைத்தார்கள். அவர் ஒரு வெள்ளைப் போர்வையால் மூடப்பட்டார்.

பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். ''அல்லாஹ்வே! சஅத் உனது வழியில் ஜிஹாது செய்தார். உனது ரஸூலை உண்மைப்படுத்தினார். அவரது பொறுப்புகளை நிறைவேற்றினார். நீ அவரது உயிரை நலமுடன் ஒப்புக் கொள்வாயாக. பிறரது உயிரை நலமுடன் வாங்குவது போன்று இவருக்கும் செய்வாயாக.'' ஹஸ்ரத் சஅத் அவர்களுக்கு சிறிது நினைவு திரும்பியது. ஹஸ்ரத் சஅத் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு விட்டு மரண நோயில் இருந்த அவரது கண்கள் திறந்தன.

ஹஸ்ரத் சஅத், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்கள் மீது சலாம் உண்டாகட்டும். நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என்று நான் சாட்சி கூறுகிறேன்'' என்று கூறினார். ஹஸ்ரத் சஅத் உடைய வீட்டினர் இதனைப் பார்த்தனர். ஹஸ்ரத் சஅத் உடைய தலையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மடியில் வைத்திருந்தார்கள். அவர்களுக்கு பயம் ஏற்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அது குறித்து கூறப்பட்டது.

சஅத் பின் மஆஸ் வீட்டினர், நீங்கள் அவரது தலையை மடியில் வைத்திருப்பதைப் பார்த்து பயந்து விட்டார்கள் என்றதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ''நான் அல்லாஹ்விடம், நீங்கள் எவ்வளவு பேர் அவரது வீட்டில் இருக்கிறீர்களோ அதனைப் போன்று மலக்குகள் வஃபாத் நேரத்தில் அவருடன் இருக்க வேண்டும் என்று கேட்கிறேன்'' என்றவாறு அன்னார் அவருக்காக துஆ செய்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 325,326 சஅத் பின் முஆஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களின் அறிவிப்பில் அன்னார் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மெல்லிய மிருதுவான பட்டுப் போர்வை அன்பளிப்பு வழங்கப்பட்டது. அன்னார் பட்டாடையைத் தடுத்திருந்தார்கள். அந்த ஆடையைப் பார்த்து மக்களுக்கு வியப்பு ஏற்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''எவனது கையில் முஹம்மது உடைய உயிர் இருக்கிறதோ அந்த இறைவன் மீது ஆணையாக! சஅத் பின் மஆஸ் உடைய கைக்குட்டை சொர்க்கத்தில் இதனை விட மிருதுவாக இருக்கும்.'' இது புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஹத்யா........... ஹதீஸ் எண் 2615)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பட்டாடையைப் பார்த்தபோது மக்கள், அன்னார் எவ்வாறு பயன்படுத்துவார்கள்? அன்னார் இதனைத் தடுத்துள்ளார்களே என்ற எண்ணம் ஏற்பட்டது. உடனே அன்னார் அதனைக் காட்டியே முன்மாதிரியாகக் கூறினார்கள். மக்கள் வியப்பைக் காட்டினார்கள் என்று முஸ்லிம் அறிவிப்பிலும் வருகிறது.

அந்த அறிவிப்பு இவ்வாறாகும். ஹஸ்ரத் பரா அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒரு பட்டாடை பரிசளிக்கப்பட்டது. அதனை அன்னாரின் சஹாபாக்கள் முத்தமிட்டனர். அதன் மிருதுத்தன்மையைக் குறித்து வியந்தனர். அப்போது அன்னார், ''இதன் மிருதுத்தன்மையைக் குறித்து வியக்கிறீர்களா? நிச்சயமாக சொர்க்கத்தில் சஅத் பின் மஆஸ் உடைய கைக்குட்டை இதனை விட சிறந்ததாகவும் மிருதுவாகவும்

இருக்கும் என்று கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாப் ஃபஸாயிலிஸ் சஹாபத்தி மின் ஃபஸாயிலி சஅத் பின் முஆஸ் ஹதீஸ் எண் 2468)

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களுடைய அறிவிப்பு. ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் மரணம் அடைந்தபோது அர்ஷும் அதிர்ந்தது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டேன். இது புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மனாகிபுல் அன்ஸார் பாப் மனாகிபி சஅத் பின் முஆஸ் ஹதீஸ் எண் 3803)

முஸ்லிமிலும் வருகிறது. அனஸ் பின் மாலிக் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஅத் உடைய ஜனாஸா வைக்கப்பட்டபோது, இவரால் ரஹ்மான் உடைய அர்ஷ் அதிர்ந்தது என்று கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாப் ஃபஸாயிலிஸ் சஹாபத்தி மின் ஃபஸாயிலி சஅத் பின் முஆஸ் ஹதீஸ் எண் 2467)

இதற்குரிய விளக்கத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் இவ்வாறு கூறுகிறார்கள்: அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் அவர்கள் அகழ்ப் போருக்கு வந்தபோது, அவருக்கு முடிந்த எல்லா சிகிச்சைகளும் செய்த பிறகு குணம் கிடைக்கவில்லை. காயம் மூடியதும் பிறகு மீண்டும் திறந்தது. இவர் பெரும் கலப்பற்ற சஹாபியாக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஅத் உடைய சிகிச்சையில் பெரும் கவனம் செலுத்தினார்கள். அன்னார் அகழ்ப்போரில் இருந்து திரும்பியதும், ஒரு வழிகாட்டல் வழங்கினார்கள். சஅதை மஸ்ஜிதின் முற்றத்திலேயே ஒரு கூடாரத்தில் வைக்க வேண்டும். அதனால் எளிதாக அவரை Nursing செய்து கவனித்துக் கொள்ள முடியும்.

ஒரு முஸ்லிம் பெண் ரிஃபிதா என்ற பெயர் கொண்டவர் அவரை கவனிக்கக் கூடாரத்தில் வைக்கப்பட்டார். காயமுற்றவர்களுக்கு Nursing செய்வதற்கு அவ்வாறு பெண்களை வைப்பார்கள். காயமுற்றவர்களை ஒரு கூடாரத்தில் வைத்து அப்பெண்ணைக் கொண்டு கவனித்து வருவார்கள். பொதுவாக மஸ்ஜிதின் வளாகத்திலேயே கூடாரமிட்டுக் காயமுற்ற முஸ்லிம்களுக்கு சிகிச்சை தரப்பட்டு வந்தது. எனவே அசாதாரணமான கவனிப்புக்குப் பிறகும் அன்னாரின் நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. அதே நிலையில் பனூ குரைலாவின் பிரச்சனை வேறு வந்தது. இதனால் சஅத் மிகவும் கஷ்டத்தைச் சகிக்க வேண்டியது வந்தது. அவரது பலவீனமும் இன்னும் அதிகமானது.

அதே நாளில் ஒருநாள் சஅத் மிகவும் உருக்கமாக இறைவனிடம் துஆ செய்தார். எனது எஜமானனே! எனது உள்ளத்தில் என்ன எண்ணம் உள்ளது என்று நீ அறிவாய். நான் உனது மார்க்கத்தைப் பாதுகாக்க உனது மார்க்கத்திற்காக ஜிஹாது செய்ய விரும்புகிறேன். அவர்களோ உனது ரஸூலை பொய்ப்படுத்தினர். அவரை அவரது நாட்டிலிருந்து வெளியேற்றினர்.

எனது எஜமானனே! எனது கருத்தில் எமக்கும் குறைஷிக்கும் இடையில் யுத்தம் முடிந்து விட்டது. ஆனால் உனது எண்ணத்தில் யுத்தம் எஞ்சியிருக்கிறது எனில் எனக்கு அவர்களுடன் சண்டையிடும் அளவுக்கு அவகாசம் நல்குவாயாக. எனக்கு அவர்களுடன் சண்டை முடிந்து விட்டால் எனக்கு மேலும் வாழ விருப்பம் இல்லை. எனக்கு ஷஹாதத்தின் மவ்த் கிடைக்கச் செய்வாயாக.

அவருக்கு அன்று இரவே காயம் ஏற்பட்டது. இரத்தம் பீறிட்டது. கூடாரத்தைத் தாண்டி இரத்தம் சென்றது. மக்கள் பயந்து கூடாரத்தினுள் வந்தனர். சஅத் உடைய நிலை முற்றிலும் இரத்தமாக இருந்தது. இதே நிலையில் சஅத் உயிரை விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சஅத் மரணத்தால் பெரும் துயரம் ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலையின்படி சஅத் உடைய மரணம் முஸ்லிம்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும்.

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுக்கு அன்ஸார்களிடம் இருந்த அந்தஸ்து முஹாஜிரீன்களுக்கு அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இருந்த அந்தஸ்தை ஒத்ததாக இருந்தது. களங்கமின்மையில், தியாகத்தில் இஸ்லாமிய சேவையில், ரஸூர் மீது பேரன்பில் இவர் எத்தகைய உயர் நிலை வகித்தார் எனில், அந்நிலை மிகக் குறைந்த மக்களிடமே காணக்கூடியதாக இருந்தது. அவரது ஒவ்வொரு அசைவு மற்றும் அமைதியும் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் நிறுவனர் மீதுள்ள அன்பில் மூழ்கி அவரது ஆன்மா மாய்ந்துபோய் இருந்தது.

அவர் தமது கோத்திரத்தின் தலைவராக இருந்தபோதிலும் அவரது முன்மாதிரி அன்ஸார்களிடம் மிகவும் ஆழிய செயல் முன்மாதிரியாக இருந்தது. அத்தகைய தகுதி வாய்ந்த ஆன்மீகப் பெருந்தகையின் மரணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய துயரம் ஓர் இயல்பான நிலையேயாகும். ஆனால் அன்னார் முழுமையான பொறுமையைக் கைக்கொண்டார்கள். இறைவனது நியதிக்கு முன் தலைகுனிந்தார்கள்.

சஅத் உடைய ஜனாஸா தூக்கப்பட்டபோது சஅத் உடைய வயோதிக தாயார் அன்பின் மிகுதியால் உரத்த குரலில் ஒப்பாரி வைத்தார். அந்த ஒப்பாரியில் அந்தக் கால வழக்கத்திற்கு ஏற்ப சஅத் உடைய பெருமைகளைக் குறித்து கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஒப்பாரிப் பாட்டைக் கேட்டு, ‘‘அன்னார் ரஸூல் என்ற முறையில் ஒப்பாரியை விரும்பா விட்டாலும், ஒப்பாரி வைப்பவர்கள் பெரும் பொய்யைச் சொல்வது வழக்கம். ஆனால் இப்போது சஅத் உடைய தாயார் கூறியது முற்றிலும் உண்மையாகும். அதாவது சஅத் மீது என்னென்ன சிறப்புகள் கூறப்பட்டனவோ அவை முற்றிலும் சரியானதாகும்’’ என்று கூறினார்கள்.

அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜனாஸா தொழ வைத்தார்கள். அடக்கம் செய்ய தாமும் சென்றார்கள். கபர் தோண்டும் வரை அங்கேயே இருந்தார்கள். அங்கு துஆ செய்த பிறகுதான் சென்றார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் ஒருவேளை அன்னார் கூறினார்கள். இஹ்தஷ்ஷ அர்ஷுர் ரஹ்மானி லிமவ்த்தி சஅத் – சஅத் உடைய மரணத்தினால் ரஹ்மானின் அர்ஷ் அதிர்ந்தது. அதாவது மறுமை உலகில் இறைவனது ரஹ்மத் மகிழ்ச்சியுடன் சஅத் உடைய ஆன்மாவை வரவேற்றது.

அர்ஷ் அதிர்ந்தது என்பதன் பொருள் அதுதான். ஒரு காலத்திற்குப் பிறகு அன்னாருக்கு ஒரு பட்டாடை அன்பளிப்பாக வந்தபோது சில சஹாபிகள் அந்தப் பட்டாடையின் மென்மையை

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ் உமக்கு ஏதாவதொரு துன்பத்தைக் கொடுத்தால் அதனை அகற்றுபவர் அவனையன்றி வேறெவருமில்லை. அவன் உமக்கு ஏதாவதொரு நன்மையினை நாடினால், அவனுடைய அருளைத் தடுத்து நிறுத்துபவர் எவனுமில்லை. அவன் தன் அடியார்களுள் தான் விரும்புபவருக்கு(த் தன் அருளை) வழங்குகின்றான். மேலும் அவன் மிக அதிகமாக மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (10:108)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

மிருதுத்தன்மையை வியந்தபோது, அதனை அசாதாரணமான ஒன்றாக அறிந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "இதன் மென்மை குறித்து வியந்து போகிறீர்களா? இறைவன் மீது ஆணையாக! சொர்க்கத்தில் சஅத் உடைய சால்வைகள் இதனை விட மென்மையாகவும் மிருதுவாகவும் சிறந்ததாகவும் இருக்கும்" என்றார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 613,614)

முதலில் புகாரி மற்றும் முஸ்லிம் ஹதீஸ்களில் கைக்குட்டை என்று வந்தது. மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் இந்த இடத்தில் சால்வை என்று மொழிபெயர்த்துள்ளார்கள். ஆடைக்கும் அரபியில் அதே சொல் பயன்படுகிறது. சஅத் உடைய தாயார் அழுதவாறு அந்தக் கவிதையைக் கூறியபோது,

وَيْلُ أُمِّ سَعْدٍ سَعْدَا بَرَاعَةً وَنَجْدَا
بَعْدَ أَيَادٍ يَا لَهُ وَمَجْدَا مُقَدَّمًا سَدَّ بِهِ مَسَدَّا

சஅதின் தாயாருக்கு சஅதின் மரணம் குறித்து ஆதங்கம் ஏற்பட்டது. அவர் நுட்ப ஞானமும் வீரமும் கொண்டவர். வீரம் மற்றும் சிறப்பின் தொகுப்பாக இருந்தார்கள். இந்தப் பருவத்தின் நன்மையை என்ன கூறுவது? அவர் வெறுமைகளை நிரப்புகிற எல்லாருக்கும் தலைவராக இருந்தார். அவர் ஒரு வீரத்தின் தலையூற்றாக இருந்தார்.

இதனைக் கூறியதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

كُلُّ الْبَوَاكِي يَكْذِبْنَ إِلَّا أُمَّ سَعْدٍ

ஒருவர் மரணிக்கும்போது அழக்கூடியவர் பொய்யையே கூறுகிறார். சஅதின் தாயாரைத் தவிர மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்களைப் பயன்படுத்துகின்றனர். இது தப்காத்துல் குப்ராவிலுள்ள ஆதாரமாகும்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 328 சஅத் பின் முஆஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஅத் மிகவும் கனத்த உடல் வாகுள்ளவர். அவரது ஜனாஸா தூக்கப்படும்போது நயவஞ்சகர்கள் கூறினர். எவரது ஜனாஸாவும் சஅது ஜனாஸா போன்று இவ்வளவு லேசாக இருந்ததில்லை. பனூ குரைலா விஷயத்தில் கொடுத்த தீர்ப்பினால் இவரது ஜனாஸா இவ்வளவு லேசாகி விட்டது என்று கூறினர். அதாவது அதற்கு ஒரு எதிர்மறைக் காரணம் கற்பிக்க விரும்பினர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அதுபற்றி எடுத்துச் செல்லப்பட்டபோது அன்னார் கூறினார்கள்: "எவனது கையில் என் உயிர் இருக்கிறதோ அந்த இறைவன் மீது ஆணையாக! சஅத் உடைய ஜனாஸா உங்களுக்கு மிகவும் லேசாக இருக்கக் காரணம் மலக்குகள் அவரது ஜனாஸவைத் தூக்கியுள்ளனர்."

இன்னோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "70 ஆயிரம் மலக்குகள் சஅத் உடைய ஜனாஸாவுக்கு வந்துள்ளார்கள். அவர்கள் இதற்கு முன் எவருக்காகவும் பூமியில் இறங்கவில்லை."

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 328 சஅத் பின் முஆஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 464 சஅத் பின் முஆஸ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஅத் பின் மஆஸ் ஜனாஸாவின் முன் செல்வதைக் கண்டேன்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 329 சஅத் பின் முஆஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரி கூறுகிறார்கள்: ஜன்னத்துல் பகீயில் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் கபரைத் தோண்டியவர்களுள் ஒருவனாக இருந்தேன். தோண்டியபோது அதிலிருந்து கஸ்தூரியின் நறுமணம் வந்தது. எங்கள் நுரையீரல் வரை சென்றடைந்தது. நாங்கள் மண்ணறையைத் தோண்டி முடித்ததும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வந்து சேர்ந்தார்கள். சஅத் உடைய உடல் மண்ணறையின் அருகில் வைக்கப்பட்டது. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜனாஸா தொழுகை நடத்தினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: நான் மக்கள் எவ்வளவு அதிகமாக இருக்கக் கண்டேன் என்றால் அவர்கள் ஜன்னத்துல் பகீயை நிறைத்து விட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 329,330 சஅத் பின் முஆஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

அப்துர் ரஹ்மான் பின் ஜாபிர் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் சஅத் உடைய கபர் தயாராகியதும் நான்கு பேர் ஹாரிஸ் பின் அவ்ஸ், உஸைத் பின் ஹுஸைர், அபூ நாயிலா, ஸில்கான் பின் ஸலாமா, ஸல்மா பின் ஸலாமா பின் பக்ஷ் ஆகியோர் கபரில் இறங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஅத் உடைய கால்மாட்டில் நின்று கொண்டிருந்தார்கள். சஅதை கபரில் இறக்கியதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய முகத்தின் நிறம் மாறியது. அன்னார் மூன்று முறை ஸுப்ஹானல்லாஹ் கூறினார்கள். அன்னாருடன் சஹாபாக்களும் மூன்று முறை ஸுப்ஹானல்லாஹ் கூறினர். அது ஜன்னத்துல் பகீ முழுவதும் எதிரொலித்தது.

பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூன்று முறை அல்லாஹு அக்பர் கூறினார். அன்னாருடன் எல்லா சஹாபாக்களும் மூன்று முறை அல்லாஹு அக்பர் கூறினர். அது ஜன்னத்துல் பகீ முழுவதும் எதிரொலித்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்கள் முகத்தில் மாற்றத்தைக் கண்டோம். நீங்கள் மூன்று முறை ஸுப்ஹானல்லாஹ் கூறினீர்கள். அதற்கு என்ன காரணம்? என்று கேட்டனர். அன்னார், சஅத் உடைய கபரில் நெருக்கடி ஏற்பட்டது. அவர் நசுக்கப்பட்டார். அதிலிருந்து ஒருவருக்கு விடுதலை கிடைக்கும் எனில் சஅதுக்கு கிடைத்திருக்கும். அல்லாஹ் அவருக்கு அதனை பரந்ததாக ஆக்கினான்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 330 சஅத் பின் முஆஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

## திருக்குர்ஆனிலிருந்து...

பூமியில் உள்ள எல்லா உயிரினத்திற்கும் உணவளிப்பது அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது. மேலும் அதன் தற்காலிகமானதும், நிரந்தரமானதுமான தங்குமிடத்தை அவன் அறிகின்றான். (இவை) எல்லாம் தெளிவான ஒரு நூலில் (பதிவாகி) உள்ளது. (11:7)

A.Nasir Ahmad (மேலப்பாளையம்)

மிஸ்வர் பின் ரஃபாஆ குரலி அறிவிக்கிறார்கள்: சஅத் பின் மஆஸ் உடைய தாயார் அவரது சடலத்தை இறக்க வந்தார். மக்கள் அவரை திரும்ப அனுப்பினார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கடள் அவரை விட்டு விடுமாறு கூறினார்கள். அவர் வந்தார். அங்கு மண் கற்கள் வைக்கப்பட்டது. அங்கு சஅத் உடைய சடலத்தைக் கண்டார்.

பிறகு கூறினார். நீர் அல்லாஹ்விடம் இருக்கிறீர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அங்கு அவரிடம் அவரது மகனுக்காக இரங்கல் தெரிவித்தார்கள். அவரது அருகில் அமர்ந்தார்கள். முஸ்லிம்கள் மண்ணிட்டு கபரை மூடி சரிசெய்து தண்ணீர் தெளித்தார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கபருக்கு அருகில் வந்து சிறிது நேரம் நின்று விட்டு துஆ செய்தார்கள். பிறகு சென்றார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடன் இருந்த இரு சஹாபிகளான ஹஸ்ரத் அபூபக்கர், ஹஸ்ரத் உமர் இருவருக்குப் பிறகு முஸ்லிம்களுக்கு வேறு எவரது பிரிவும் ஹஸ்ரத் சஅதின் பிரிவைப் போன்று துயரத்தை ஏற்படுத்தவில்லை. ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் உடைய வயது மரணமடையும்போது 37 ஆகும்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 330,331 சஅத் பின் முஆஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஅத் பின் மஆஸ் உடைய தாயாரிடம் கூறினார்கள். உங்களது துயரம் முடிவுக்கு வராதா? உமது கண்ணீர் தீராதா? அல்லாஹ் பார்த்து புன்னகைத்தவரும், அவரது மரணத்திற்காக அர்ஷ் அதிர்ந்ததும் ஆகிய ஒருவர் உமது மகன் ஆவார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 332 சஅத் பின் முஆஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஅதை அடக்கம் செய்து விட்டு ஜனாஸாவை விட்டுத் திரும்பியதும் அன்னாரின் கண்ணீரால் தாடி நனைந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 463 சஅத் பின் முஆஸ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் அறிவிக்கிறார்: நான் நிச்சயமாக பலவீனமானவன். இந்த அறிவிப்பு சஅத் (ரலி) அவர்களுடைய அறிவிப்பாகும். நான் நிச்சயமாக பலவீனமானவன். ஆனால் மூன்று விஷயங்களில் உறுதியானவன். முதலில் நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் எதனைக் கேட்டேனோ அதனை உண்மை என்று அறிவேன். எந்தச் சந்தேகமும் அதில் ஏற்படுவதில்லை. இரண்டாவது தொழுகையில் எனக்கு அதனைத் தவிர வேறு நினைவு வர விடுவதில்லை. தொழுகை முடியும் வரை அவ்வாறே இருப்பேன். கவனமாகத் தொழுவேன். மூன்றாவது ஏதாவது ஒரு ஜனாஸா வந்தால் இறந்தவர்களில் ஒருவனாக நான் என்னைக் கருதிக் கொண்டு, என்ன கேட்கப்படுமோ? என்ன பதில் கூறுவேனோ? என்று அந்தக் கேள்வி பதில் என்னிடம் நடத்தப்படுவதுபோன்று கருதாமல் விடுவதில்லை. அதாவது மறுமை பற்றிய கவலை அவ்வளவு அதிகமாக இருந்தது.

(மஜ்மவுல் ஸவாஹித், கிதாபுல் மனாகிப் மாஜாஅ ஃபீ உஸைது பின் ஸுஹைர், ஹதீஸ் எண் 15689, தொகுதி 9 பக்கம் 375 – 2001 ஆம் ஆண்டு தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அன்ஸார்களில் மூன்று பேர் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் பனூ அப்பே ஷஅல் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிறகு இந்த மூவரைத்தவிர வேறு எவருக்கும் மேன்மை வழங்கப்பட முடியாது. அவர்கள் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ், ஹஸ்ரத் உஸைர் பின் ஹுழீர், ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் ஆவர்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 71 சஅத் பின் முஆஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் சஅத் பின் அபி வக்காஸ் (ரலி). சஅத் உடைய சுட்டுப் பெயர் அபூ இஸ்ஹாத் ஆகும். அவரது தந்தை பெயர் மாலிக் பின் உஹைப். இன்னும் சில அறிவிப்புகளில் மாலிக் பின் உஹைப் என்றும் வருகிறது. இவரது தந்தையாரின் சுட்டுப் பெயர் அபி வக்காஸ் என்பது பிரபலமாக இருந்தது. இதனால் இவரது பெயர் சஅத் பின் அபி வக்காஸ் என்று கூறப்படுகிறது. இவரது தாயார் பெயர் ஜம்னா பின்த் சுப்யான் என்பதாகும்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 606,607 சஅத் பின் வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஅத் பின் அபி வக்காஸ் அவர்கள் பனூ சுஹ்ரா என்ற குறைஷிகளின் ஒரு கோத்திரத்தைச் சார்ந்தவர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 123 & சீரத் இப்னு ஹிஷாம் தொகுத 1 பக்கம் 680,681)

சஅத் பின் அபி வக்காஸ் சொர்க்கத்திற்கு வாழ்நாளிலேயே நற்செய்தி கூறப்பட்ட பத்து சஹாபிகளுள் ஒருவர் ஆவார்கள். அந்தப் பத்து சஹாபாக்களும் அஷ்ரே முபஷ்ஷரா என்று அழைக்கப்பட்டனர். அவர்களுள் ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸ் அவர்கள், இறுதியில் வஃபாத் ஆனவர்கள் ஆவர்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 2 பக்கம் 324 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

இந்த எல்லா சஹாபிகளும் முஹாஜிர்களைச் சார்ந்தவர்கள் ஆவர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணம் வரை நற்செய்தி சொல்லப்பட்ட பத்து பேர் மீது திருப்தி கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸ் தாம் ஈமான் கொண்டது பற்றி

### திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் அவனுக்கேற்பட்ட துன்பத்திற்குப் பின்னர், நாம் அவனை ஏதாவதொரு (பெரும்) அருட்கொடையைச் சுவைக்கச் செய்தால் (இப்பொழுது) என் துன்பங்கள் (எல்லாம்) என்னைவிட்டும் நீங்கிவிட்டனவென்று அவன் கூறுகின்றான். நிச்சயமாக, அவன் மிகுந்து பெருமை கொண்டவனாகவும், ஆணவம் மிகுந்தவனாகவும் இருக்கின்றான். **(11:11)**

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

கூறுகிறார்கள்: நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டபோது எவரும் ஈமான் கொள்ளவில்லை. நான் ஓரிடத்தில் ஏழு நாட்கள் தங்கி இருந்தேன். முஸ்லிம்களின் நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) பாப் மனாகிப் சஅத் பின் அபீ வக்காஸ், ஹதீஸ் எண் 3727 & சஹீஹ் புகாரி, கிதாபுல் மனாகிப் அன்ஸார் பாப் இஸ்லாம் சஅத் ஹதீஸ் எண் 3858)

மூன்று பேர் இருந்தோம். நாங்கள் தொழுகை கடமையாவதற்கு முன்பே ஈமான் கொண்டு விட்டோம்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 453 சஅத் பின் மாலிக் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஅத் பின் அபி வக்காஸ் ஈமான் கொண்டது பற்றி அவரது மகள் அறிவிக்கிறார்: சஅத் கூறினார். நான் கனவில் பார்த்தேன். நான் மிகவும் இருட்டில் இருக்கிறேன். எதுவும் தெரியவில்லை. திடீரென்று பார்க்கிறேன். சந்திரன் உதயமாகிறது. நான் அதனை நோக்கிச் செல்கிறேன். எனக்கு முன் ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா, ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் அபூபக்கர் ஆகியோர் நிலவின் பக்கம் செல்கிறார்கள். நான் அவர்களிடம் நீங்கள் எப்போது வந்தீர்கள்? என்று கேட்கிறேன். அவர்கள் நாங்களும் இப்போதுதான் வந்தோம் என்கின்றனர்.

ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸ், ‘‘ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மறைவான முறையில் மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைக்கிறார்கள் என்பது எனக்கு தெரிய வந்திருந்தது’’ என்று கூறுகிறார். நான் அன்னாரை ஹேபே அஜியாத் –இல் சென்று சந்தித்தேன். அஜியாத் என்பது மக்காவிலுள்ள சபா குன்றின் அருகில் சிறிய இடம் அங்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது ஆடுகளை மேய்த்து வந்தார்கள். அன்னார் அஸர் தொழுது முடித்திருந்தார்கள். அப்போது நான் பைஅத் செய்து முஸ்லிம் ஆனேன்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 455 சஅத் பின் மாலிக் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 63,64)

சஅத் உடைய மகள் ஆயிஷா பின்த் சஅத் அறிவிக்கிறார்: நான் எனது தந்தையார் கூறக் கேட்டுள்ளேன். அவர் கூறினார். நான் முஸ்லிமானபோது எனது வயது 17 ஆகும். சில அறிவிப்புகளில் அப்போது அன்னாருக்கு 19 வயது என்றும் வந்துள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 103 சஅத் பின் அபீ வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆரம்பத்தில் ஹஸ்ரத் அபூபக்கருடைய தப்லீகில் 5 பேர் ஈமான் கொண்டனர். இஸ்லாத்தின் கம்பீரமிக்க சஹாபிகளைச் சார்ந்தவர்களாக அவர்கள் கருதப்படுகின்றனர். அவர்களில் மூன்றாமவர் சஅத் பின் அபி வக்காஸ் ஆவார்கள்.

சீரத்துல் காத்தமுன் நபிய்யீனில் இது கூறப்பட்டுள்ளது. அப்போது அவர் முற்றிலும் இளைஞராக இருந்தார்கள். அப்போது அவருக்கு வயது 19 ஆக இருந்தது. இவர் பனூ சுஹ்ராவைச் சார்ந்தவர். மிகவும் வீரமும் துணிச்சலும் உள்ளவர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காலத்தில் ஈராக் இவரது கைகளால் வெற்றி கொள்ளப்பட்டது. இவர் அமீர் முஆவியா காலத்தில் மரணம் அடைந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 122–123)

ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய நிறைய அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 2 பக்கம் 324 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

சஅத் உடைய மகன் முஸ்அப் அறிவிக்கிறார்: எனது தந்தையார் சஅத் அறிவித்துள்ளார்கள். எனது தாயார் சத்தியமிட்டிருந்தார்கள். அதாவது, சஅத் தமது மார்க்கத்தை விடாத வரை அவருடன் பேசமாட்டேன். அவர் இஸ்லாத்தை விட்டு விட வேண்டும். அதுவரை உண்ணவும் மாட்டேன்; குடிக்கவும் மாட்டேன் என்று அவரது தாயார் சத்தியமிட்டிருந்தார்கள்.

எனது தாயார் கூறினார்: அல்லாஹ் பெற்றோர் சொல்வதைக் கேட்குமாறு கூறியுள்ளான். நான் உனது தாய் ஆவேன். நான் உமக்கு கட்டளையிடுகிறேன். நீ உமது மார்க்கத்தை விட்டு விட்டு, நான் கூறுவதைக் கேள் என்றார். அவர் கூறுகிறார். மூன்று நாள் இதே நிலையிலேயே அவர் இருந்தார். இதனால் பலவீனத்தால் மயக்கம் ஏற்படத் தொடங்கியது. அப்போது அவருடைய மகன் உம்மாரா என்பவர் நின்றிருந்தார். அவர் வந்து தாயாருக்கு தண்ணீர் புகட்டினார். உடனே அவர் சஅதைக் குறித்து தீய துஆ செய்யத் தொடங்கினார். அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்.

وَوَصَّيْنَا الْإِنسَانَ بِوَالِدَيْهِ حُسْنًا – நாம் மனிதனுக்கு அவனது பெற்றோருடைய உரிமைகளைத் தருவதற்காக கவனமூட்டுகிறோம். (29:9)

وَإِن جَاهَدَاكَ عَلَىٰ أَن تُشْرِكَ بِي – இருவரும் உன்னிடம் இணை வைக்குமாறு சண்டையிட்டால் நீ அதற்கு கட்டுப்படாதே.

பிறகு وَصَاحِبْهُمَا فِي الدُّنْيَا مَعْرُوفًا – இருவரையும் உலக நடப்புக்கேற்ப கவனித்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு நன்மை செய்யுங்கள். அவர்கள் இணை வைக்குமாறு சண்டையிட்டால் கட்டுப்பட வேண்டாம். (31:16)

இவ்வாறு விளக்கமாகச் செல்கிறது. உலக விஷயங்களில் அவர்கள் சொல்வதை ஏற்று செய்யுங்கள். وَصَاحِبْهُمَا فِي الدُّنْيَا مَعْرُوفًا அவர்களுடன் தொடர்பு வைத்து நன்மை செய்யுங்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஃபஸாயில்.... ஹதீஸ் எண் 1748)

ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸ் அறிவிக்கிறார்கள். நான் எனது தாயார் மீது மிகவும் அன்பு செலுத்தினேன். முதல் அறிவிப்பு முஸ்லிம் உடையது. பிறகு சீரத்தில் (வாழ்க்கை வரலாற்றில்) வருகிறது. ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸ் கூறுகிறார்கள்: நான் எனது தாயாருடன் மிகவும் அன்பு வைத்திருந்தேன். நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டதும் அவர் கூறினார். சஅதே! நீ என்ன மார்க்கத்தை ஏற்றுக் கொண்டுள்ளாய்? நீ உனது புதிய மார்க்கத்தை விட்டு விடு. அதுவரை நான் உண்ணவும் மாட்டேன்; குடிக்கவும் மாட்டேன். சாகும் வரை அப்படியே இருப்பேன்.

சஅத் கூறுகிறார். நான் அவரிடம் கூறினேன். எனது அன்புத் தாயே! நீர் அவ்வாறு செய்யாதீர். நான் எனது மார்க்கத்தை விட மாட்டேன். சஅத் கூறுகிறார். எனது தாயார் ஒருநாள் முழுவதும் எதுவும் உண்ணவில்லை; குடிக்கவில்லை. அவரது நிலை மிகவும் மோசமானது. நான் அவரிடம், இறைவன் மீது ஆணையாக உமக்கு ஓராயிரம் உயிர்கள் இருந்து ஒவ்வொன்றாக வெளியே சென்றாலும் நான் எவருக்காகவும் எனது மார்க்கத்தை விட மாட்டேன் என்று கூறினார். அவரது தாயார் இதனைக் கேட்டதும், உண்ணல், குடித்தலை தொடங்கினார். அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை

இறக்கினான். அதாவது இருவரும் உம்மிடம் இணை வைக்குமாறு சண்டையிட்டால், அவர்களுக்கு அறிவில்லாத ஒன்றுக்கு விளக்கம் செய்யுமாறு சண்டையிட்டால் ஃபலா துதிஃஹுமா. நீர் அவ்விருவரின் பேச்சைக் கேட்க வேண்டாம். ஆம், உலக விவகாரங்களில் அவர்களுடன் நல்ல தொடர்பு வைத்துக் கொள்க. (31:16)

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துல் சஹாபா தொகுதி 2 பக்கம் 455 சஅத் பின் மாலிக் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஅதை தமது மாமா என்று அழைத்தார்கள்.

(காஸி முஹம்மது சுலைமான் சல்மான் மன்ஸூர் பூரி அவர்கள் எழுதிய அஸ்ஹாபுல் பத்ர் என்ற நூல், பக்கம் 91 – 2015 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள இஸ்லாமிய்யா அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஒருமுறை சஅத் எதிரிலிருந்து வந்தபோது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவரைப் பார்த்து, எனது மாமா ஆவார். யாருக்காவது இத்தகைய மாமா இருந்தால் காட்டுங்கள் பார்க்கலாம் என்றார்கள்.

இமாம் திர்மிதி இதற்குக் காரணமாக இவ்வாறு கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உடைய தாயார் பனூ சுஹ்ராவைச் சார்ந்தவர்கள். சஅத் பின் அபி வக்காஸ் அவர்களும் பனூ சுஹ்ராவைச் சார்ந்தவர்கள் ஆவர்.

(ஜாமி திர்மிதி, கிதாபுல் மனாகிப் பாப் மனாகிப் அபூ இஸ்ஹாக் சஅத் பின் அபீ வக்காஸ் ஹதீஸ் எண் 3752)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களது ஓர் அறிவிப்பு. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிரா மலையில் இருந்தபோது அது ஆடியது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "ஹிராவே! நில். உன் மீது நபி, ஸித்தீக், ஷஹீதுகள் தவிர வேறு எவரும் இல்லை" என்று கூறினார்கள். அப்போது அந்த மலையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் அபூபக்கர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ், ஹஸ்ரத் சுபைர் பின் அவாம், ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸ் ஆகியோர் இருந்தனர். இது முஸ்லிம் உடைய அறிவிப்பாகும்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஃபஸாயில், பாப் ஃபஸாயில் தல்ஹா வ சுபைர் ஹதீஸ் எண் 2417)

இஸ்லாத்தின் ஆரம்ப கால நாள்களில் முஸ்லிம்கள் மறைந்து மறைந்து தொழுதார்கள். ஹஸ்ரத் சஅத் சில சஹாபாக்களுடன் ஒரு மலை அடிவாரத்தில் தொழுது கொண்டிருந்தார்கள். அங்கு இணை வைப்பவர்கள் வந்து விட்டனர். முஸ்லிம்களை கிண்டல் செய்யத் தொடங்கினர். இஸ்லாம் பற்றி குறை கூறத் தொடங்கினர். இது ஒரு கட்டத்தில் சண்டையை நெருங்கியது. உடனே சஅத் அவர்கள் ஒட்டகத்தின் ஓர் எலும்பை எடுத்து ஓர் இணை வைப்பவரின் தலையில் அடித்ததும் அவரது தலை பிளந்தது. இஸ்லாத்தில் சிந்தப்பட்ட முதல் இரத்தமாக அது இருந்தது.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 2 பக்கம் 324 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

மக்காவில் இணை வைப்போர் முஸ்லிம்களை ஊர் விலக்கி வைத்தபோது, அவர்கள் ஷிஃபே அபூதாலிபில் முற்றுகையிடப்பட்டார்கள். முஸ்லிம்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாயினர். அதில் ஒருவர் ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸ் ஆவார்கள்.

அதனைப் பற்றி குறிப்பிட்டவாறு சீரத்துல் காத்தமுல் நபிய்யீனில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்: என்னென்ன துயரங்கள் கடுமைகள் ஆகியவற்றை அந்த அப்பாவி மக்கள் அனுபவிக்க நேர்ந்தது எனில், அதனைக் கேட்கும்போது மெய்சிலிர்க்கிறது. சில நேரங்களில் மிருகங்களைப் போன்று காட்டில் மர இலைகளைச் சாப்பிட்டனர் என்று சஹாபாக்கள் கூறுகின்றனர்.

சஅத் பின் அபி வக்காஸ் கூறுகிறார்கள்: ஒருநாள் இரவு எனது காலில் ஒரு பொருள் பட்டது. அது ஈரமாகவும் மென்மையாகவும் இருந்தது. அது ஒருவேளை பேரீத்தம்பழத் துண்டாக இருக்கலாம். அப்போது எவ்வளவு பசியாக இருந்தது எனில் உடனே அதனை எடுத்து வாயில் போட்டுக் கொண்டேன். இப்போது வரை அது என்னவென்று எனக்குத் தெரியவில்லை. இன்னொரு சந்தர்ப்பத்தில் பசியினால் கீழே கிடந்த காய்ந்த ஒரு தோல் கிடந்தது. அதனை எடுத்து தண்ணீரில் நனைத்து மென்மையாக்கி சாப்பிட்டார். நாங்கள் இந்த மறைவான விருந்தின் மூலம் நாளை கழித்தார்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 166,167)

அல்லாஹ் முஸ்லிம்களுக்கு இடம்பெயரக் கட்டளையிட்டபோது ஹஸ்ரத் சஅத் மதீனாவுக்கு இடம் பெயர்ந்தார். அங்கு இணை வைக்கும் சகோதரர் உத்பா பின் அபி வக்காஸ் வீட்டில் தங்கினார். உத்பா மக்காவில் சண்டையிட்டு மதீனாவில் வந்து தங்கியிருந்தார்.

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 66,67)

ஹஸ்ரத் சஅத் முதன்முதலில் ஹிஜ்ரத் செய்தவர்களுள் ஒருவராக இருந்தார்கள். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனா வரும் முன்பு மதீனாவுக்கு இடம் பெயர்ந்து வந்து விட்டார்கள்.

(அமதத்துல் காரி தொகுதி 1 பக்கம் 305 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஅத் பின் அபி வக்காஸை ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைருடன் சகோதரத்துவம் ஏற்படுத்தித் தந்தார்கள். இன்னோர் அறிவிப்பின்படி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸை ஹஸ்ரத் சஅத் பின் அஸீஸுடன் சகோதரத்துவம் ஏற்படுத்தித் தந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 103 சஅத் பின் அபீ வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இவரது சகோதரத்துவத்தை ஏற்படுத்தித் தந்ததில் கருத்து வேறுபாட்டின் காரணங்களில் குலாம் பாரி சாஹிப் ஒரு காரணம் எழுதியுள்ளார்கள். மக்காவில் அவரை முஸ்அப் உடன் இணைத்தார்கள். மதீனா வந்ததும் அவரை சஅத் பின் மஆஸ் உடன் இணைத்தார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

உமக்கு அருளப்படுகின்ற இறையறிவிப்பை நீர் பின்பற்றுவீராக. மேலும் அல்லாஹ் தீர்ப்பு வழங்கும் வரை பொறுமையை மேற்கொள்வீராக. மேலும் தீர்ப்பு வழங்குவர்களுள் சிறந்தவன் அவனே. (10:110)

A.Basheer Ahmad, Sec.Waqf-e-jadid, Melapalayam

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 64)

ஹஸ்ரத் சஅத் குரைஷிகளின் வீரமிக்க வாகன ஓட்டிகளில் ஒருவராக இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய தற்காப்பு பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட சஹாபிகளில் ஒருவர் சஅத் பின் அபி வக்காஸ் ஆவார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் சஹாபா தொகுதி 2 பக்கம் 172 – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

அபூ இஸ்ஹாக் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபிகளில் நான்கு பேர் மிகவும் தாக்குதல் தொடுப்பவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் சுபைர், ஹஸ்ரத் சஅத் ஆவர்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 2 பக்கம் 325 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

மதீனா ஹிஜ்ரத்துக்குப் பிறகு முஸ்லிம்களுக்கு நிராகரிப்பவர்களால் தாக்குதல் தொடுக்கப்படுவதன் பயம் இருந்தது. இதனால் முஸ்லிம்கள் இரவில் விழித்திருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் இரவில் விழித்து இருப்பார்கள். இது குறித்து ஓர் அறிவிப்பு வருகிறது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: மதீனாவுக்கு வந்த காலத்தில் ஓர் இரவு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உறங்க இயலவில்லை. அன்னார், ‘அந்தோ! எனது சஹாபிகளில் ஒரு நல்ல மனிதர் எனக்கு காவல் தந்தால் நன்றாக இருக்கும்’ என்று கூறினார்கள். அதே நிலையில் ஒரு சப்தம் கேட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் யார்? என்று கேட்டார்கள். வந்தவர், ‘சஅத் பின் அபி வக்காஸ் வந்துள்ளேன்’ என்றார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், ‘நீர் எப்படி வந்தீர்?’ என்றார்கள். உடனே அவர், ‘எனக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பற்றி உள்ளத்தில் ஒரு பயம் ஏற்பட்டது. எனவே தங்களின் காவலுக்கு நிற்க வந்துள்ளேன்’ என்றார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஅதுக்காக துஆ செய்து விட்டு தூங்கினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 282,283 & சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஃபஸாயில் பாப் ஃபஸ்ல் சஅத் பின் அபீ வக்காஸ் ஹதீஸ் எண் 2410)

இன்னோர் அறிவிப்பு புகாரி மற்றும் முஸ்லிம் ஆகிய இரண்டிலும் உள்ளது. அதில் இந்த சம்பவம் உள்ளது. ஆனால் அது பற்றி என்ன துஆ செய்தார்கள் என்ற குறிப்பு இல்லை. ஆனால் திர்மிதியில் சஅத் உடைய மனாகிபில் கூறுகிறார்கள். எனது தந்தை சஅத் கூறியதாக, அவரது மகன் கைஸ் அறிவிக்கிறார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவருக்காக துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ اسْتَجِبْ لِسَعْدٍ اِذَا دَعَا

அல்லாஹ்வே! சஅத் உம்மிடம் துஆ செய்யும் போது ஏற்றுக் கொள்வாயாக என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். அதாவது அல்லாஹ்வே! இவரது அம்பு சரியான இடத்தில் அமரட்டுமாக. இவரது துஆவை ஏற்றுக் கொள்வாயாக.

(குலாம் பாரி ஸைஃப் அவர்கள் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 67,68)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்த துஆவின் காரணத்தால் ஹஸ்ரத் சஅத் உடைய துஆ ஒப்புக் கொள்ளப்படுவது குறித்து பிரபல்யமாக இருந்தார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 2 பக்கம் 324,325 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸ் துஆ ஒப்புக் கொள்ளப்படக் கூடியவர்களுள் ஒருவராக இருந்தார்கள். ஒருவர் அவர் மீது பொய்யைப் புனைந்தபோது அவருக்கு எதிராக துஆ செய்தபோது, அல்லாஹ்வே! இவர் பொய் சொல்கிறார். இவரது பார்வை போய் விட வேண்டும். அவரது ஆயுள் நீளமாக இருக்க வேண்டும். அவரை குழப்பத்தினால் சோதிப்பாயாக என்று துஆ செய்தார்கள். இவை அனைத்தும் அவருக்கு ஏற்பட்டன.

(ஜாமிவுல் உலூம் வல் ஹகம்.... தொகுதி 2 பக்கம் 350 – 2001 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகிறது. கைஸ் பின் அபி ஹாஸிம் அறிவிக்கிறார்: ஒருமுறை நான் மதீனாவின் பஜாரில் சென்று கொண்டிருந்தேன். நான் ஹஜாரு ரஷீத் என்ற இடத்தை அடைந்தபோது நான் பார்த்தேன். மக்கள் ஒரு மனிதரைச் சுற்றிக் குழுமி இருந்தனர். அவர் ஒரு வாகனத்தில் இருந்தார். ஹஸ்ரத் அலியை ஏசிக் கொண்டிருந்தார். அங்கு சஅத் பின் அபி வக்காஸ் வந்தார்கள். அங்கு நின்று என்னவென்று விசாரித்தார்கள். மக்கள், இந்த மனிதர் ஹஸ்ரத் அலியை ஏசுகிறார் என்று கூறினர்.

ஹஸ்ரத் சஅத் முன்னால் வந்தார்கள். மக்கள் அன்னாருக்கு வழி விட்டனர். அந்த மனிதரின் முன் சென்று நின்றார். மனிதனே! ஏன் ஹஸ்ரத் அலியை ஏசுகிறாய்? அவர் எல்லாருக்கும் முதலில் இஸ்லாத்தை ஏற்றவர் இல்லையா? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து தொழுத முதல் மனிதர் இல்லையா? அவர் மக்கள் எல்லாரையும் விட இறையச்சம் உள்ளவர் இல்லையா? அவர் மக்கள் எல்லாரையும் விட அறிவுள்ளவர் இல்லையா? ஹஸ்ரத் சஅத் மேலும் மேலும் சொல்லிக் கொண்டே சென்றார்கள்.

எந்த அளவுக்கு கூறினார்கள் என்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தமது மகளை அவருக்கு திருமணம் செய்து அவரை தமது மருமகன் ஆக்கவில்லையா? அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து கொடியை உயர்த்தியவர் இல்லையா? என்று கூறிய சஅத் கிப்லாவை நோக்கித் திரும்பி துஆக்காக கையை உயர்த்தினார்கள். அல்லாஹ்வே! உமது அவ்லியாக்களில் ஒருவரான ஹஸ்ரத் அலியை ஏசுகிறார். இவர் இந்த சபையில் இருந்து செல்லும் முன் உனது ஆற்றலின் அடையாளத்தைக் காட்டுவாயாக என்று கேட்டார்கள்.

அறிவிப்பாளரான கைஸ் கூறுகிறார்கள்: மக்கள் அங்கிருந்து களையும் முன் அவரது வாகனத்தை இறைவன் பூமியில் விழச் செய்தான். அவரது தலையை கல்லில் மோதச் செய்தான். தலை பிளந்து மரணித்தான்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்மிடமிருந்து (ஏதாவதொரு) அருளை மனிதன் சுவைத்துப் பார்க்குமாறு நாம் செய்து, பின்னர் நாம் அதனை அவனிடமிருந்து அகற்றிவிட்டால், அவன் முற்றிலும் நம்பிக்கையிழந்தவனாகவும், அருளை மறுப்பவனாகவும் ஆகிவிடுகின்றான். **(11:10)**

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

(அல் முஸ்தத்ரிக் கிதாப் மஃரூஃப்த்துஸ் சஹாபா பாப் சஅத் பின் அபீ வக்காஸ் ஹதீஸ் எண் 6121 தொகுதி 3 பக்கம் 571,572 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனா ஹிஜ்ரத் செய்தவுடனே பாதுகாப்பு வழங்கினார். இதுபோன்று அகழ்ப்போர் சம்பவத்திலும் அதுபோன்று சம்பவம் வரலாற்றில் வருகிறது.

அதனைக் குறிப்பிட்டவாறு முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா கூறுகிறார்கள். ஊரின் பாதுகாப்புக்காக காவல் காத்து, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் களைப்படைந்தபோது அவர் என்னிடம் வந்து சிறிது நேரம் இளைப்பாறுவார்கள். உடல் சற்று சூடானதும் உடனே எழுந்து பாதுகாப்புக்காக செல்வார். இவ்வாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் சஹபாக்களுடன் விழித்திருந்தார்கள். இவ்வாறு தொடர்ந்து விழித்ததால் ஒருநாள் முற்றிலும் களைப்பாகி விட்டார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் களைப்படைந்திருக்கும்போது கூறினார்கள்: எவராவது களங்கமற்ற முஸ்லிம் இருந்தால் நான் சிறிது நிம்மதியாக உறங்குவேன் என்று கூறினார்கள். அப்போது வெளியில் சஅத் பின் அபி வக்காஸ் உடைய குரல் கேட்டது. நான் உங்களுக்கு பாதுகாப்புத் தர வந்துள்ளேன் என்றார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனக்கு காவல் தேவையில்லை. இன்ன இடத்தில் அகழின் விளிம்பு உடைந்து விட்டது. அங்கு சென்று பாதுகாப்பு வழங்குங்கள். முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று கூறினார்கள். சஅத் அங்கு காவலுக்குச் சென்றதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிறிது நேரம் உறங்கினார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 279)

சஅத் பின் அபி வக்காஸ் அவர்களின் மேலும் விபரங்கள் வருங்காலத்தில் தரப்படும். இன்ஷா அல்லாஹ்.

இப்போது நான் இரண்டு மூன்று ஜனாஸா காயிப் தொழ வைப்பேன். அவர்களைப் பற்றி கூறுவேன். முதலாவது மாஸ்டர் அப்துல் ஸமீஇ சாஹிப் காட்வேரி. இவர் 6 ஜூலை 2020 –ல் ரப்வாவில் வஃபாத் ஆகி விட்டார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் 1937 –ல் காதியானில் பிறந்தார். இவரது தந்தை அப்துர் ரஹீம் சாஹிப் காட்கரி இயக்கத்திற்காக தொண்டு செய்த பழைய மக்களில் ஒருவர். இவரது தந்தைவழிப் பாட்டனார் அப்துஸ் ஸலாம் சாஹிப் காட்கரி 1903 –ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அருளுக்குரிய கரங்களில் பைஅத் செய்து இணைந்தார். சஹாபியாக இருந்தார். மாஸ்டர் ஸமிஇ சாஹிப் ஆரம்பக் கல்வி காதியானில் கற்றவர்.

பிறகு நாடு பிரிவினை நடந்தபோது ரப்வாவுக்கு ஹிஜ்ரத் செய்தார். இவருக்கு ஒரு மகன் இரு மகள்கள் உள்ளனர். இவரது மனைவி 3–4 வருடங்களுக்கு முன்பு வஃபாத் ஆகி விட்டார். 1960 –ல் B.Sc. முடித்த பிறகு அதே வருடம் தற்காலிக ஆசிரியராக தஃலீமுல் இஸ்லாம் பள்ளிக்கூடத்தில் பாடம் நடத்தினார். 1962 –ல் B.Ed. முடித்தார். பிறகு ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1969 –ல் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் M.Ed. நிறைவு செய்தார். அங்கேயே ஆசிரியரானார். 1972 –ல் தஃலிமுல் இஸ்லாம் மேல்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார்.

**இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)**

பிறகு ஸ்கூல் நாட்டுடமையாக்கப்பட்டது. பிறகு 1970 –ல் பள்ளி நாட்டுடைமை ஆக்கப்பட்டதால் இவரை வேறு பள்ளியில் மாற்றினார்கள். பிறகு பல்வேறு பள்ளிகளில் இவர் பாடம் எடுத்து வந்தார். பிறகு 2005 –ல் முதல் 2009 வரை மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், பிறகு 2013 முதல் 2016 வரை கிழக்குப் பகுதியின் தலைவராகவும் ரப்வாவிலேயே தொண்டு செய்யும் வாய்ப்புப் பெற்றார்.

எனக்கும் பள்ளியில் ஆசிரியராக இருந்துள்ளார். மிகச் சிறப்பாக பாடம் நடத்துவார். முகத்தில் எப்போதும் மென்மை காணப்படும். நல்ல கோணத்தில் புரிய வைப்பார். அல்லாஹ் இவருக்கு ரஹ்மத்தும் மன்னிப்பும் வழங்குவானாக. இவரது தகுதியை உயர்த்துவானாக. இவரது சந்ததிகளையும் ஜமாஅத்துடனும் கிலாஃபத்துடனும் தொடர்புடன் வைப்பானாக.

இரண்டாவது ஜனாஸா கண்ணியத்திற்குரிய ஸையத் முஜீபுல்லாஹ் சாதிக் சாஹிப். இவர் 28 மே 2020 அன்று தமது 83 வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் கண்ணியத்திற்குரிய சாதிக் அலி சாஹிப் மற்றும் கண்ணியத்திற்குரிய சல்மா பேகம் சாஹிபா என்ற ஸையத் மஹ்பூப் ஆலம் சாஹிபின் மகளுக்கும் பிறந்தவர். பரிசுத்தமான நகராகிய காதியானில் இவரது கண்கள் திறந்தன. காதியானின் தூய சூழலில் வளர்ந்தார். இவரது தந்தையார் ஸையத் சாதிக் அலி சாஹிப் சாரன்பூர் முதல் கலீஃபாவின் கையில் பைஅத் செய்யும் வாய்ப்புப் பெற்றிருந்தார். தாய்வழிப் பாட்டனார் மஹ்பூப் ஆலம் சாஹிப் பீஹாரி அவர்கள் நாடு பிரிவினையின்போது 19 செப்டம்பர் 1947 –ல் காதியானில் ஓர் எதிரியின் குண்டுக்கு இரையாகி ஷஹாதத்தின் பானத்தை அருந்தும் வாய்ப்புப் பெற்றார்.

அதுபோன்று தாய்வழிப் பாட்டனாரின் சகோதரர் செய்யது மஹ்பூப் ஆலம் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் ஆடிட்டராக இருந்தார். இவரது இன்னொரு சிறப்பு இவர் பீஹாரிலிருந்து நடந்தே வந்து காதியான் சேர்ந்தார். பைஅத் செய்தார். இவரை அஸ்ரிபேல்ட் புதூரியோ உடைய சதராக இருக்கும் வாய்ப்பு கிடைத்தது.

பணி ஓய்வுக்குப் பிறகு கண்ணியத்திற்குரிய பிரிட்டன் அமீர் சாஹிபின் அலுவலகத்தில் தன்னார்வராக 16 ஆண்டுகள் பணியாற்றினார். ஆர்வத்துடன் பணி செய்வார். எப்போதும் முகத்தில் மென்மை இருக்கும். நகைச்சுவை உணர்வும் உள்ளவர். கவனத்துடன் பணியைச் செய்வார். பிறருக்கு சுமையைத் தருவதில்லை; சிரமப்படுத்துவதில்லை. பிறரது பணியையும் தாம் செய்ய விரும்புவார்.

இவருக்கு திருமணம் கண்ணியத்திற்குரிய ஆயிஷா சாதிக் சாஹிபாவுடன் நடந்தது. இப்பெண்மணி ரப்வாவில் இருந்த பாகூ முஹம்மது ஆலம் சாஹிப் என்ற ஓய்வு பெற்ற ஸ்டேஷன் மாஸ்டர் மகளாக இருந்தார். 1968 –ல் இத்திருமணம் நடந்தது. இவரது மனைவிக்கும் ரப்வாவில் லஜ்னாவில் நிறைய பணிகளைச் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. இவருக்கு இரு மகன்கள் இரு மகள்கள் உள்ளனர். டாக்டர் கலீமுல்லாஹ் சாதிக் சாஹிப் MTA –ல் தன்னார்வராக பணி செய்கிறார்.

அல்லாஹ்வின் அருளால் தஹஜ்ஜுத் தொழுபவர். உம்ரா செய்யச் சென்றார். மூட்டு வலி இருந்தது. மனைவி வீல் சேரில் அமர்ந்து

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

செய்யுமாறு கூறினார். நான் உம்ராவின் நற்கூலி வாங்க விரும்புகிறேன். எனவே நடந்தே செல்வேன் என்று கூறி விட்டார். அதுபோன்று சந்தாக்களில் நல்ல கவனம் இருந்தது. இவரது பிள்ளைகள், மற்றவர்கள் நிறைய கடிதம் எழுதியுள்ளனர். பிள்ளைகள் சிறப்புகளைக் கூறுவார்கள்தான். இவரது மகன் மாஷா அல்லாஹ் ஜமாஅத்துடன் இணைந்துள்ளான். இதிலிருந்து இவர் கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் உள்ள பிரியத்தை பிள்ளைகளிடம் ஊட்டியுள்ளார் என்று தெரிகிறது. உயரிய தர்பிய்யத் வழங்கியுள்ளார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியது போன்று மனிதனின் அக்கம் பக்கத்தவர் சந்திப்பவர்கள் அசல் சாட்சி ஆவார்கள். அவரது நன்மைகளைப் பார்ப்பவர்கள் ஆவர். அவரது நன்மைகளை உண்மைப்படுத்துகின்றனர். இது முஜீபுல்லாஹ் சாதிக் சாஹிபிடம் உண்மையாகி உள்ளது.

இவரது அக்கம் பக்கத்து முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் கூட இவர் தொண்டு செய்துள்ளார். பிள்ளைகளையும் கூட செய்ய வைத்துள்ளார். இவரது மரணத்தில் அவர்கள் மிகவும் துயருற்றனர். அதுபோன்று இவருடன் பணி செய்பவர்கள் ஒவ்வொருவரும் இவரது நன்னடத்தையையும் பணியில் ஈடுபாடு குறித்தும் ஒவ்வோர் ஊழியருக்கும் இவர் செய்யும் சேவை குறித்தும் குறிப்பிட்டுள்ளனர். பணி செய்தும் வந்தார். மக்களுக்கு சேவையும் செய்து வந்தார். எவருக்காவது தேநீர் அருந்த கொடுக்க வேண்டி வந்தால் அதனையும் செய்தார்.

நான் இஸ்லாமாபாத் மாறும்போது கடந்த வருடம் இவருக்கு பெரும் கவலை இருந்ததை சந்திக்கும்போது குறிப்பிட்டார். ஒவ்வொரு வாரமும் உங்கள் பின்னால் எவ்வாறு நாங்கள் தொழுவோம்? என்று கூறினார். அவருக்கு நான் ஆறுதல் கூறினேன். பெரும்பாலான ஜுமுஆ பைத்துல் ஃபுதூஹில் தான் நடக்கும் என்று கூறினேன். இஸ்லாமாபாத்தில் நடக்கும்போது நீங்கள் அங்கு வரலாம் என்றதும் அவரது முகம் மலர்ந்தது.

இவ்வாறு இவர் தனது பிள்ளைகளை மஸ்ஜிதிற்கு அருகில் வைப்பதற்காக நான்காவது கலீஃபாவின் ஹிஜ்ரத்திற்குப் பிறகு மஸ்ஜித் ஃபஸ்ல் அருகில் வீடு எடுத்து தினமும் ஒரு மணி நேரம் பயணம் செய்து வேலைக்குச் சென்று வருபவராக இருந்தார். குழந்தைகள் பள்ளியுடன் இணைந்திருப்பதற்காக அவ்வாறு செய்தார். இவ்வாறு அவருக்கு கவலை இருந்தது. தொலைவில் சென்று விட்டால் ஜுமுஆ எப்படி தொழுவோம் என்ற கவலை இருந்தது.

எவ்வாறிருப்பினும் மிகவும் களங்கமற்ற நல்ல மனிதர் ஆவார். மிகவும் விசுவாசத்துடன் வாழ்வைக் கழித்து வந்தார். அதனை தமது பிள்ளைகளிடமும் ஏற்படுத்த விரும்பினார். அல்லாஹ் அவருடன் மன்னிப்பு, கருணையின் நடைமுறையைக் காட்டுவானாக. இவரது தகுதியை உயர்த்துவானாக. பிள்ளைகளுக்கும் ஜமாஅத்துடன் கிலாஃபத்துடன் இவரது விருப்பத்திற்கேற்ப இன்னும் சொல்வதாயின், அதனை விட அதிகமாக நெருங்கி இருக்கச் செய்வானாக. இவரது மனைவியையும் தமது பாதுகாப்பில் வைப்பானாக. அவரது மன அமைதிக்கு வழி ஏற்படுத்தித் தருவானாக.

மூன்றாவது ஜனாஸா முதலிலேயே கூறி விட்டேன். முந்தைய ஜுமுஆவில் விடுபட்டு விட்டது. நமது பழைய ஊழியர் இறை வழியில் கைதானவர் நயீமுத்தீன் சாஹிப் மர்ஹூம் உடைய ஜனாஸாவும் இவர்களுடன் சேர்த்து ஜுமுஆவிற்குப் பிறகு தொழ வைப்பேன். அல்லாஹ் அனைவருக்கும் தமது மன்னிப்பையும் கருணையையும் வழங்குவானாக.

......☆......☆......☆......

(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)

கூறினார்கள்: இங்கு ஆப்ரிக்கர்கள் மற்றும் அரபியர்கள் இருக்கின்றனர். அவர்களை ஆய்வு செய்யுங்கள். அங்கு பணி செய்யுங்கள். மேலும் தப்லீக் செய்யுங்கள்.

நாயிப் சத்ர் அவ்வல் அவர்கள் கூறினார்கள்: சத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் எந்த பணியை என்னிடம் ஒப்படைப்பார்களோ அதை நான் செய்கின்றேன். அவர்கள் இல்லாதபட்சத்திலும் பொறுப்பு சதராக எனது கடமையை நான் செய்கின்றேன்.

செயற்குழுவின் ஒரு உறுப்பினர் ஹுஸூர் அவர்களிடம் கூறினார்கள்: மக்கள் அறிக்கைகள் தருவதில்லை. அவர்களிடம் தொழுகை மற்றும் இதர பணிகளுக்கான அறிக்கைகளை கேட்கும்போது, இது எங்களுக்கும் இறைவனுக்கும் உள்ள விவகாரமாகும். நாங்கள் உங்களுக்கு அறிக்கை தர மாட்டோம் என்று கூறி விடுகின்றனர்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அப்படிப்பட்ட மக்களுக்கு புரிய வைக்க வேண்டும். மேலும் எந்த மக்கள் தொழுகைக்காக வருவதில்லையோ அவர்களது வீட்டை எரித்து விட எண்ணுகிறேன் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏன் கூறினார்கள் என்று புரிய வைக்க வேண்டும். இது இறைவனது விவகாரம் என்றால் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இதனை பொருட்படுத்தியிருக்க மாட்டார்கள். மேலும் எதுவும் கூறியிருக்க மாட்டார்கள். வீட்டை எரித்து விட எண்ணுகிறேன் என ஏன் கூறினார்கள்.

ஆக இத்தகைய மக்களுக்கு புரிய வையுங்கள். அவர்களை ஆய்வு செய்து வாருங்கள். பொதுவான ஆய்வு செய்யுங்கள். எத்தகைய படிவத்தை தயார் செய்ய வேண்டும் என்றால் அதில் அவர்கள் டிக் செய்தால்போதும். அதிகமான விளக்கத்திற்கு செல்ல வேண்டாம்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: உங்களது மஜ்லிஸ்களின் ஸயீம்களிடம் அறிவுறுத்துங்கள். அதாவது அவர்கள் அன்ஸார்களிடம், நமது தொழுகை சென்டருக்கு தொழுகைக்காக வருமாறு கூற வேண்டும். கவனமூட்டுவது மிகவும் அவசியமாகும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஜமாஅத் மூலமாகவோ அல்லது அன்ஸாருல்லாஹ் அமைப்பு மூலமாகவோ தம்மிடம் எவரும் தொடர்பு கொள்ளக்கூடாது என்று சிலர் கருதுகின்றனர். அத்தகையவர்களிடம், நீங்கள் ஏன் இங்கு வந்துள்ளீர்கள்? என்று கேளுங்கள். நீங்கள் ஜமாஅத் மூலமாகவே இங்கு வந்துள்ளீர்கள். அத்தகைய மக்கள் தொடர்பாக நீங்கள் உங்களது ஜமாஅத்தின் சத்ர் சாஹிபிற்கு தெரியப்படுத்துங்கள். மேலும் அமீருக்கும் தெரியப்படுத்துங்கள். பிறகு இத்தகையவர்களைப் பற்றி, இந்த மக்கள் எங்களை தொடர்பு கொள்ள வேண்டாம் என்று கூறுவதாக தலைமையகத்திற்கு எழுதுங்கள்.

காயித் தஃலீம் அவர்கள் கூறினார்கள்: புத்தங்களைப் படித்த பிறகு நாங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கின்றோம். ஆனால் அன்ஸார்கள் தரப்பிலிருந்து பதில் எழுதப்பட்ட தாள்கள் கிடைப்பதில்லை. 245 நபர்களைக் கொண்ட தஜ்னீதின் அடிப்படையில் நாங்கள் வருடத்தில் நான்கு முறை கேள்விகளை தயார் செய்கின்றோம். ஆனால் பதில் எழுதப்பட்ட 70 பேப்பர்களே எங்களை வந்தடைந்துள்ளது. அதற்கு ஹுஸூர் அவர்கள், ஏறக்குறைய ஆயிரத்தில் எழுபதே வந்துள்ளது.

(உருது பத்ர் 14 நவம்பர் 2019 – தொடரும்...)

......☆......☆......☆......

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 27 Aug 2020 Issue No. 35

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

**30 செப்டம்பர் 2019 – திங்கட்கிழமை**

**ஹுஸூர் அவர்களுடன் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் ஹாலந்தின் தேசிய செயற்குழு மீட்டிங்**

இதற்குப் பிறகு ஹாலந்து ஜமாஅத்தின் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் தேசிய செயற்குழு உறுப்பினர்களின் மீட்டிங் ஹுஸூர் அவர்களுடன் ஆரம்பமானது. ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள்.

♦ ஹுஸூர் அவர்கள் காயித் உமூமி அவர்களிடம், உங்களின் மொத்த மஜ்லிஸின் எண்ணிக்கை எத்தனை? மேலும் அனைத்து மஸ்லிஸ்களும் முறையாக அறிக்கைகளை அனுப்புகின்றனவா? என்று கேட்டார்கள்.

அதற்கு காயித் உமூமி அவர்கள், மொத்தம் 14 மஜ்லிஸ்கள் இருக்கின்றன. அனைவருமே முறையாக அறிக்கைகளை அனுப்புகின்றனர். மேலும் நாங்கள் அந்த அறிக்கையை ஆராய்ந்து அவர்களுக்கு பதிலும் அனுப்புகின்றோம். மேலும் நாங்கள் ஏம்ஸ்டர்டமிலுள்ள பைத்துல் மஹ்மூதில் நாங்கள் எங்களது அலுவலகத்தை கட்டியுள்ளோம் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் காயித் மால் அவர்களிடம் உங்களது பட்ஜெட் எவ்வாறு தயார் செய்யப்படுகிறது என்று கேட்டார்கள். அதற்கு அவர், நாங்கள் மஜ்லிஸ்களின் ஸயீம்களுக்கு படிவத்தை அனுப்பிக் கொடுத்து பட்ஜெட்டை ஒன்று திரட்டுகின்றோம். இதற்குப் பிறகு எங்களது ஒட்டுமொத்த பட்ஜெட் தயார் செய்யப்படுகிறது. இப்போது எங்களது வருடாந்திர பட்ஜெட்ட 30000 யூரோ ஆகும் என்று கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அவர்கள், ஒவ்வொரு நாஸிரும் தமது வருமானத்திற்கேற்ப அன்ஸார் சந்தாவை செலுத்தினால் பிறகு பட்ஜெட் அதிகம் ஆகலாம் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் காயித் உமூமி அவர்களிடம், தர்பிய்யத்திற்கான என்ன திட்டத்தை வைத்துள்ளீர்கள்? எத்தனை அன்ஸார்கள் ஜமாஅத்தாக தொழுகின்றார்கள்? என்று கேட்டார்கள். மேலும் கூறினார்கள்: உங்களது தேசிய மற்றும் உள்ளூர் செயற்குழுவின் உறுப்பினர்களிடம் ஜமாஅத்தாக தொழுவதற்கான பழக்கத்தை ஏற்படுத்துங்கள். இவர்கள் அனைவரும் ஃபஜர் மற்றும் இஷா தொழுகைக்காக தத்தமது சென்டர்களுக்கு வர வேண்டும். குறைந்த இந்த இரண்டு நேரத் தொழுகையாவது ஜமாஅத்தாக தொழப்பட வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: உங்களது தேசிய மற்றும் உள்ளூர் செயற்குழுவின் உறுப்பினர்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ அங்கு இருக்கின்ற சென்டர்களுக்கு ஃபஜ்ர் மற்றும் இஷா தொழுகைக்கு வர வேண்டும்.

இரண்டாம் அணியின் துணை தலைவர் அவர்களிடம் ஹுஸூர் அவர்கள், எத்தனை அன்ஸார்கள் சைக்கிள் ஓட்டுகின்றார்கள் என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள், சில அன்ஸார்கள் சைக்கிள் ஓட்டுகின்றனர். மேலும் சில அன்ஸார் மிகவும் செயல் துடிப்புள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

காயித் தஜ்னீத் அவர்கள் தமது அறிக்கையை எடுத்துக் கூறியவாறு, தற்போது அன்ஸார்களின் எண்ணிக்கை 266 ஆகும் என்று கூறினார்கள்.

காயித் ஈஸார் அவர்கள் ஹுஸூர் அவர்களிடம் கூறினார்கள்: அன்ஸார்கள் நோயாளிகளை நலம் விசாரிப்பதற்காக மருத்துவமனை செல்கின்றனர். முதியோர் இல்லத்திற்கு செல்கின்றனர். அதேபோன்று நாங்கள் தொகையை ஒன்றுதிரட்டி ஆப்ரிக்காவில் இரண்டு கிணறுகளை அமைத்துள்ளோம். மொத்தம் 20000 யூரோவை ஒன்றுதிரட்டி Humanity First அமைப்பிடம் நாங்கள் கொடுத்துள்ளோம்.

பல்வேறு மஜ்லிஸ்களின் ஸயீம்களும் இந்த மீட்டிங்கில் கலந்து கொண்டிருந்தனர். ஹுஸூர் அவர்கள் ஏம்ஸ்டர்டம் மஜ்லிஸின் ஸயீம் சாஹிப் அவர்களிடம் தொழுகையைப் பற்றி கேட்டறிந்தவாறு, நீங்கள் மஸ்ஜிது மஹ்மூதில் தொழுகையை நிறைவேற்றுகின்றீர்களா? அங்கு எத்தனை நபர்கள் வருகின்றனர் என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள், மஸ்ஜிது மஹ்மூது தொலைவில் இருக்கின்றது. மக்களிடம் வாகனம் கிடையாது. அங்கு வருவதற்கு நீண்ட நேரம் ஆகிவிடுகின்றது. சிறிது சோம்பேறித்தனமும் இருக்கிறது என்று கூறினார்கள். அதற்கு ஹுஸூர் அவர்கள், சோம்பேறித்தனம் அதிகமாகவும், தூரம் குறைவாகவும் இருக்கிறது என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் காயித் தப்லீக் அவர்களிடம், தப்லீக்கின்றான என்ன திட்டம் உங்களிடம் இருக்கிறது என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், எங்களது தப்லீக் பட்ஜெட் 2500 யூரோ ஆகும். நாங்கள் அமைத்திக் கருத்தரங்கங்களையும் நடத்துகின்றோம். அது ஜமாஅத் சென்டரில் நடைபெறுகின்றது. எனவே 2000 யூரோவில் அந்நிகழ்ச்சி நடைபெற்றுவிடும். அதுமட்டுமின்றி Charity Walk நிகழ்ச்சியையும் நாங்கள் நடத்துகின்றோம். அதன் மூலமாகவும் தப்லீக்கிற்கான வழிகள் திறக்கின்றன என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அன்ஸார்கள் மூலமாக நடைபெறுகின்ற பைஅத்துகள் தொடர்பாக ஜமாஅத்தின் புதிய அஹ்மதிகளுக்கான தர்பிய்யத் துறையிடம், அன்ஸார்கள் மூலமாக இந்த இந்த பைஅத்துகள் நடைபெற்றுள்ளதாக நீங்கள் தெரிவிப்பீர்களா என்று கேட்டார்கள். மேலும் ஹுஸூர் அவர்கள்

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad